தால் மும்பையில் இருந்து சென்னைக்கு வி.எம்.பாஸ்கர் குடியே காவல் நிலையத்தனா வசாரித் தனராம். அப்போது, கணவன், சனை கேட்டுக் கொடுமை செய் வதாக, தருமபுரி மகளிர் காவல் கல்செய்திருந்தார்.

# சேமிக்கப்பட்ட புள்ளி விவரங்களைப் பாதுகாப்பது பெரும் சவால்

## கணினி வளர்ச்சி மைய இயக்குநர்

தாம்பரம்,பிப் 15: உலகெங்கும் கணினி தொழில்நுட்ப உதவியுடன் தற்போது நொடிப்பொழுதில் சேமித்துவரும் பல லட்சம் கோடி புள்ளி விவரங்கள், தகவல்களைச் சேமித்துப் பாதுகாக்க, எதிர்காலத்தில் பெரும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என்று மேம்பட்ட கணினி வளர்ச்சி மைய இயக்குநர் எல்.ஆர்.பிரகாஷ் கூறினார்.

மேற்கு தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்ற சர்வதேசக் கருத்தரங்கில் அவர் பேசியது:

தற்போது கணினி தொழில் நுட்பம் குறித்த கல்வி பயிலும் நீங்கள் படிப்பை நிறைவு செய்தபின் என்ன பணி உங்களுக்கு கிடைக்கும் என்று நீங்கள் யூகித்துக் கூட பார்க்க முடியாத அளவுக்கு நொடிக்கு நொடி தொழில் நுட்பம் மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்திய கல்லூரிகளில் இருந்து வெளியேறும் பெரும்பாலான மாணவர்கள் வெளிநாட்டு நிறுவனங்களில் நிரந்தரமற்ற மென்பொருள் கூலிவேலை பார்க்கும் தகுதியுடையவர்களாகவே உள்ளனர் என்பது கசப்பான உண்மை. இந்நிலையில், மாணவர்கள், ஒரு




சர்வதேசக் கருத்தரங்க மலர் வெளியீட்டு விழாவில் (இடமிருந்து) கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயக்குமார், தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து, மேம்பட்ட கணினி வளர்ச்சி மையம் இயக்குநர் எல்.ஆர்.பிரகாஷ், சிங்கப்பூர் நானாயங் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் சுமன் சூ, பாங்காக் பல்கலைக்கழகப் பேராசிரியர் கரெல் ஸ்டெரக்.

சுந்தர்பிச்சை போன்று தகுதி, தொழில்நுட்பத் திறமைகளை வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

தற்போது சேமிக்கப்படும் புள்ளிவிவரங்கள், தகவல்கள் எதிர்காலத்தில் விலைமதிப்பற்ற புதையலாகத் திகழப் போகின்றன. அவற்றை அபகரிக்கவும், அழிக்கவும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் இருந்து பாதுகாப்பது பெரும் சவாலாக இருக்கும்.

தற்போது இலவசமாக அளிக்கப்பட்டு இருப்பதாக நீங்கள் கருதும் மின்னஞ்சல், முகநூல், வாட்ஸ் அப், சுட்டுரை உள்ளிட்ட அனைத்து தகவல் பரிமாற்றத்தையும் இன்னொருவர் பெறுவதன் மூலம் ஆதாயம் பெறப்படுகிறது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும் என்றார் பிரகாஷ்.

கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயக்குமார், தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து, மேம்பட்ட கணினி வளர்ச்சி மைய இயக்குநர் எல்.ஆர்.பிரகாஷ், சிங்கப்பூர் நானாயங் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் சுமன் சூ, பாங்காக் பல்கலைக் கழகப் பேராசிரியர் கரெல் ஸ்டெரக் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சீனாவில் இருந்து கடத்தப்பட்ட ரூ.79 லட்சம் தடை செய்யப்பட்ட பொம்மைகள் பறிமுதல்

## விருப்ப ஓய்வு பெற்றார்

மோசடி வழக்கு

## விசாரணைக்கு ஆஜ
அவகாசம் கோரி செந்தில் ப